Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.666/2019

**Depositions of PW- 7**

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி.மகேஸ்வரி | Occupation | மருத்துவர் |
| Husband Name | பழனிச்சாமி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of August 2025.

13.08.2025

1 முதல் 3 எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.05.2019 அன்று மாலை சுமார் 6.45 மணியளவில் நான் பணியிலிருந்தபோது 70 வயது மதிக்கத்தக்க பாலையா என்பவரை அவரது மனைவி மூலம் சிகிச்சைக்காக அழைத்துவரப்பட்டார். அவரை விசாரித்தபோது அன்று மாலை 6 மணியளவில் அடையாளம் தெரிந்த 3 பேர் தனது வீட்டின் முன்பு வைத்து கையால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்து பார்த்ததில் அவருக்கு வலது கையில் வீக்கம் இருந்தது தெரியவந்தது. அதனால் அவரை உள்நோயாளியாக அனுமதித்து எலும்பு முறிவு மருத்துவரிடம் ஒப்புதல் வாங்கும்படி அறிவுறுத்தினேன். காயம்பட்ட பாலையா மருத்துவமனையில் எலும்பு முறிவு நிபுணரிடம் சிகிச்சை பெற்று அவர் அளித்த சான்றின்படி பாலையாவிற்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினேன். நான் வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ 5 ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

அ.சா.1 மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தவுடன் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் அ.சா.1 க்கு விபத்து பதிவேட்டில் அவரது விவரங்களை பதிவு செய்து அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து மேற்படி கருத்துரை வழங்கினேன் என்றால் சரிதான். அ.சா.1 க்கான அனைத்து மருத்துவ சிகிச்சைகளையும் அன்றைய தினம் மருத்துவமனையில் பணியிலிருந்த எலும்பு சம்மந்தப்பட்ட மருத்துவர் தான் வழங்கினார் என்றால் சரிதான். மேற்படி எலும்பு மருத்துவரை விசாரித்தால் தான் அ.சா.1 க்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து தெரியவரும் என்றால் சரிதான். மேற்படி அ.சா1 க்கு ஏற்பட்ட காயமானது அவர் வயது முதிர்வின் காரணமாக தடுமாறி கீழே விழுந்திருந்தாலும் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். எதிரிக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து மேற்படி எலும்பு மருத்துவர் கொடுத்த மருத்துவ கருத்துரையின் அடிப்படையில் நான் அ.சா.1 க்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து கருத்துரை வழங்கினேன். மேற்படி அ.சா.1 க்கு எலும்பு மருத்துவர் கொடுத்த கருத்துரையை போலீசார் விசாரணையில் நான் போலீசாரிடம் கொடுத்தேன் என்றால் சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.